


**27.09.2026**

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் தொகை கணக்கெடுப்பு நாட்டுமக்கள் ஒவ்வொருவருக்குமான தேசிய பொறுப்பு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தொிவித்துள்ளார்.

2. வளர்ந்த இந்தியாவை உருவாக்க சுற்றுலாவை பொருளாதார ஆற்றல் மையமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழக அரசின் தங்கமோதிர திட்டத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் மதுரையில் நாளை தொடங்கி வைக்கிறார்.

4. தமிழ்நாட்டில் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் உடனடியாக நடைமுறை படுத்தப்பட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

இந்திய ராணுவம் பாகிஸ்தான் தீவிரவாத முகாம்கள் மீது நடத்திய துல்லிய தாக்குதல் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் கொள்கைகளை உலகிற்கு பறை சாற்றியதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 138-வது முறையாக இன்று உரையாற்றிய பிரதமர், இந்த

தாக்குதலின் 10-வது ஆண்டு நிறைவுநாள் நாளை கடைப்பிடிக்கப்பட உள்ளதாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இந்திய ராணுவ வீரர்களின் துணிச்சல், வீரம் உள்ளிட்டவைகளை உலகமே உற்றுநோக்கியதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாத தாக்குதல்களுக்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்து வருவதாக தொிவித்த பிரதமர், கடந்த 10 ஆண்டுகளில் பாலக்கோட் வான்வழி தாக்குதல் தொடங்கி ஆபரேஷன் சிந்தூர் வரையிலான இந்திய ராணுவத்தின் செயல்பாடுகள் இதனை எடுத்துரைப்பதாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை நாடு தற்போது கடைப்பிடித்து வருவதாகவும், அதன் பலன்களை அனுபவித்து வருவதாகவும் கூறினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு நாட்டுமக்கள் ஒவ்வொருவருக்குமான தேசிய பொறுப்பு என்று கூறிய பிரதமர், பொதுமக்கள் தங்களது விவரங்களை தாங்களே அலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

தமிழ், ஹிந்தி உள்ளிட்ட 16 மொழிகளில் se.census.gov.in என்ற இணையதளத்தில் தங்களது இருப்பிடம், குடும்ப விவரங்கள் உள்ளிட்டவைகளை 15 முதல் 20 நிமிடங்களிலேயே சமர்ப்பிக்க முடியும் என்றார்.

தகவல்களை சமர்ப்பித்த பிறகு சிறப்பு அடையாள எண் வழங்கப்படும் என்றும், அதனை கணக்கெடுப்பு பணியாளரிடம் நேரில் பகிர்ந்து கொள்ளுமாறு கூறிய பிரதமர், தகவல்கள் சரிபார்க்கப்பட்ட பிறகு அவை மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவின் ஒருபகுதியாக மாறும் என்றார்.

இதுவரை 2 கோடியே 60 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அலைப்பேசி வாயிலாக மக்கள் தொகை கணக்கெடுப்பு செயல்முறையை நிறைவுசெய்து உள்ளதாக கூறிய பிரதமர், பொதுமக்களின் துல்லிய தகவல்கள் நாட்டின் எதிர்காலம் குறித்த துல்லிய தகவல்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்றார்.

நாடுமுழுவதும் நடைபெற்று வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதற்கட்டப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதாகவும், 32 கோடிக்கும் அதிகமான குடும்பங்களின் விவரங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தொ◌ிவித்தார்.

லடாக், ஹிமாச்சல பிரதேசம், ஜம்முகாஷ்மீர், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் தொலைதூர பனிபடர்ந்த பகுதிகளில் தற்போது கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

தேசிய பெருமிதத்தை பறைசாற்றும் சோம்நாத் ஸ்வபிமான் பர்வ் கொண்டாட்டங்கள் களைக்கட்டி உள்ளதாக தொ◌ிவித்த பிரதமர், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக கி.பி. 1026-ம் ஆண்டு கஜினி முகமது சோம்நாத் கோவிலை தகர்த்த நிலையில் இன்றளவும் கடற்கரையில் பிரம்மாண்டத்துடனும், கம்பீரத்துடனும் இக்கோவில் நிலைத்து நிற்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

குஜராத் மாநிலம் மோதாரா சூரிய கோவில் பலமுறை தாக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டின் முதல் சூரிய கிராமமாக மோதாரா தற்போது உருவெடுத்துள்ளதாக கூறினார்.

வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள மோதாரா நடன விழாவில் இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய நடனங்கள் இடம்பெற உள்ளதாக கூறிய பிரதமர், மக்கள் ஒருமுறையாவது மோதாராவின் பாரம்பரியத்தை கண்டு ரசிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை கல்லூரி பேராசிரியர் பல்வேறு இடங்களில், பழங்கால சிற்பங்கள் கோவில்களை கண்டறிந்ததாகவும், இது நாட்டின் பாரம்பரியத்தை புரிந்துகொள்ள உதவுவதாகவும் பிரதமர் பாராட்டு தொ◌ிவித்தார்.

நாடுமுழுவதுமுள்ள லட்சக்கணக்கான இளையோர் போதைப் பொருட்களிலிருந்து விலகி இருக்கவும், இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உறுதிப்பூண்டுள்ளதாக கூறிய பிரதமர், 100 வார காலத்திற்கு நடைபெறும் பேதையில்லா இளைஞர்களை உருவாக்கும் இயக்கத்தின் கீழ் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக கூறிய பிரதமர், மக்கள் தங்களது உணவில் முருங்கை உள்ளிட்ட ஊட்டச்சத்து மிக்க உணவுகளை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

காந்தி ஜெயந்தி வரும் 2-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில் காந்தியடிகளின் கொள்கைகளில் ஒன்றான தூய்மையை பேணுவதற்கான பல்வேறு முன்னெடுப்புகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்ட பிரதமர், தனி நபரின் முயற்சிகள் மக்கள் இயக்கமாக மாறுவதாக சுட்டிக்காட்டினார்.

தூய்மையை பேணுவது மகாத்மா காந்தியடிகளுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி என்றார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மூலம் ஒட்டுமொத்த சூழல் அமைப்புகளும் வலுவடைவதாக கூறிய பிரதமர், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், இயற்கையின் சமநிலையை போற்றவும், பல்லுயிர் சூழலை பேணிக் காக்கவும், நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் தனித்துவமான தயாரிப்புகள் உள்ளூர் சந்தைகளில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கூறிய பிரதமர், உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாடு தன்னிறைவு பெறமுடியும் என்றார்.

பண்டிகை காலங்களில் உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொண்ட பிரதமர், மக்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பண்டிகைகளை மகிழ்ச்சியாக கொண்டாட வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

சுற்றுலாதினம்

உலக சுற்றுலாதினம் இன்று கொண்டாடப் படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சுற்றுலாத்துறை திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் வாழ்த்து தொிவித்துள்ளார்.

சமூக வலைதளப்பதிவில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் வேலைவாய்ப்பு, உள்ளூர் பொருளாதாரம், ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு வலுவான அடித்தளமாக சுற்றுலா திகழ்கிறது என கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் சுற்றுலாவை பொருளாதார ஆற்றல் மையமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டின் வளமான பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் இயற்கை பன்முகத்தன்மை ஆகியவை லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாக குறிப்பிட்ட அவர், இந்தியாவை உலகின் முன்னணி சுற்றுலாத்தளமாக மாற்றுவதற்கு அனைவரும் உறுதியேற்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

சுற்றுலாவை மேம்படுத்த டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

நாட்டின் பாதுகாப்பு தொழில் நுட்பங்களை மேம்படுத்த அதிகவனம் செலுத்தப்படுவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், நாடு தனது பாதுகாப்பில் எதிர்காலத்திற்கு தேவையான யுக்திகளை உருவாக்கி வருவதாக கூறினார்.

இந்தியா அமைதியை விரும்புவதாகவும், பாதுகாப்பில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்று அமைச்சர் உறுதிபட தொிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை

உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கம் தொடர்பான செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

2015-ம் ஆண்டு நாட்டின் படைப்பாற்றல் திறன், தொழில்முனைவு ஆகியவற்றிற்கு உயர் முன்னுரிமை அளிக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திரமோடி ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தை அறிமுகம் செய்தார்.

இந்த திட்டம் தொடங்கப்பட்டபோது 350 ஸ்டார்ட் அப் நிறுவனங்களே இருந்த நிலையில் தற்போது அவற்றின் எண்ணிக்கை 2 லட்சமாக அதிகரித்துள்ளது.

இதன்மூலம் 25 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாகி உள்ளன.

உலகளாவிய ஸ்டார்ட்அப் கட்டமைப்பில் இந்தியா 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

பள்ளி கல்லூரி மாணாக்கரின் சிந்தனைகள், புதுமை கண்டுபிடிப்புகளாக உருப்பெற்று உற்பத்தி பொருட்களாக அவற்றை மேம்படுத்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உறுதுணையாக உள்ளதாக திருச்சி தேசிய கல்லூரியின் வங்கி மேலாண்மைத்துறை பேராசிரியர் திரு அரவிந்த் தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் வழங்கும் திட்டத்தை மதுரையில் நாளை தொடங்கி வைக்கிறார்.

முதற்கட்டமாக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து 10 கோடியே 25 லட்சரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தையும் முதலமைச்சர் திறந்துவைக்கவுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அரசு தலைமை மருத்துவமனையில் இத்திட்டத்திற்கான முன்னேபாட்டு பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி. கவிதா இன்று ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஆதித்தனார்

தமிழர் தந்தை சி.ப. ஆதித்தனாரின் 122-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள செய்தியில் இதழியல் துறையில் உயிரோட்டமான எளிய தமிழ்நடையை அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டின் கடைகோடி மக்களுக்கும், செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முன்னோடியாக திகழ்ந்தவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னை எழும்பூரில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு சட்டப்பேரவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர், மாநில அமைச்சர்கள் திரு. ராஜ்மோகன், திரு. வெங்கட ரமணன் ஆகியோர் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖

அன்புமணி

தமிழக ஊரகப் பகுதிகளில் உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் உடனடியாக நடைமுறை படுத்தப்பட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில் ஏற்கனவே இத்திட்டத்தில் பணியாற்றியோருக்கு மீண்டும் பணி வழங்கப்பட வேண்டும் என அவர் வலுயுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெறும் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖

ஆசிய விளையாட்டு போட்டிகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் வில்வித்தை பிரிவின் காம்பவுண்ட் மற்றும் Recurve பிரிவுகளில் இந்திய ஆடவர், மகளிர் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஜப்பானில் நடைபெறும் இப்போட்டிகளில் இவ்விரு அணிகளும் வரும் 30-ம் தேதி நடைபெறும் அரையிறுதிப்போட்டியில் தென்கொரியாவை எதிர்கொள்கின்றன.

ஆட.வர் 80 கிலோ குத்துச்சண்டை போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் அங்குஷ் பங்கல் முன்னேறியுள்ளார்.

இந்தியா தற்போது 4 தங்கம், 12 வெள்ளி, 14 வெண்கலம் என மொத்தம் 30 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 11-வது இடத்தில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖